மலர் - 9 ஜனவரி - 1996 இதழ் - 1

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்




வெளியிடுவோர்
காங்கயம் கிறிஸ்துவின் சபையார்
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701

## -: வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :-

"திருமறை ஆசான்" வாசகர்கள் பட்டியலை மாவட்ட வாரியாக ஒழுங்கு படுத்தும் பணி நடந்து கொண்டுள்ளது. தொடர்ந்து எங்கள் மாத இதழைப் படித்துப் பயன் பெற விரும்புவோர், ஓர் அஞ்சல் அட்டையில் (Post-Card) தெளிவான முகவரியுடன் உங்கள் விருப்பத்தை எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

பதில் வரும் வாசகர்களுக்கு மட்டுமே வரும் புத்தாண்டிலிருந்து "திருமறை ஆசான்" அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

*ஆசிரியர்*

## ஆசானின் அறிவுரையிலே


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" | 1 |
| 2. | அந்நிய பாஷைகளில் பேசுதல் | 9 |
| 3. | பெண்கள் பகுதி | 14 |
| 4. | புதிய ஏற்பாட்டு ஆராதனை | 6 & 7 |
| 5. | "இன்று உங்களை பிரதிஷ்டை பண்ணுங்கள்" | 27 |
| 6. | தூய நற்செய்திக்குக் கீழ்ப்படிவது மட்டுமே இரட்சிக்கக் கூடும்! | 29 |

THIRUMARAI AASAAN

Editor
E.Z.S. RAJANAYAGAM

Honorary Editor
J.C. CHOATE

Published by Church of Christ
Dharapuram Road, KANGAYAM-638 701 Tamilnadu, India.
Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 9 JANUARY - 1996 ISSUE -1

## ஆசிரியவுரை

# "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்"

நாம் வாழும் இம்மண்ணுலகில் எத்தனையோ பெரும் தலைவர்களும், மகான்கள் என்று மக்களால் அங்கீகரிக்கப்பட்டவர்களும் வாழ்ந்து மறைந்துள்ளார்கள். மக்களின் இதயத்தில் இடம் பிடிப்பதற்குத் தேவையான தகுதிகளுள் ஒன்று "சொல் ஆற்றல்" இவ்வாற்றலை அடிப்படையாக வைத்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பெரும் தலைவர்களும், மகான்களும் பற்பல சொற்பொழிவுகளைத் தங்கள் வாழ்நாட்காலத்தில் நிகழ்த்தியிருக்கக் கூடும். அவைகள் தேச பக்தி சம்பந்தப்பட்டதாகவோ, நாட்டின் சுதந்திரம் பற்றியதாகவோ, சமுதாய சீர்திருத்தம் குறித்தோ, பொருளாதார மறுமலர்ச்சிக்கானதாகவோ, ஒரு குறிப்பிட்ட கொள்கை மற்றும் தத்துவத்தை நிலைநாட்டும் முயற்சியாகவோ, ஆன்மீக காரியங்களில் அக்கறை காட்டும் பேச்சுக்களாகவோ இருந்திருக்கலாம். அவைகள் எல்லாமே, தாங்கள் வாழ்ந்த காலச் சூழலுக்கு ஏற்றதாகத்தான் இருந்தனவேயொழிய, எக்காலத்துக்கும் நிலைத்து நிற்கக் கூடியதாக இல்லை. ஆனால், நமதாண்டவரின் "மலைப்பிரசங்கமோ" காலத்தால் கரைந்து போகாமல், இன்றும் இமாலயம் போல் உயர்ந்து நிற்கிறது. இயேசுக் கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக்கொள்ளத் தயங்குகிறவர்கள் கூட, மலைப்பிரசங்கத்தைப் படித்து வியந்து பாராட்டுகின்றனர். அதன் எளிய நடையும், சொல்லாட்சியும், கருத்தாழமும் உண்மையாகப் படிப்போரை பிரமிக்கவே செய்யும்.

மண்ணுயிர்க்காய் தன்னுயிர் ஈந்த இயேசு கிறிஸ்து, இப்பூமியில் தான் ஊழியம் செய்த நாட்களில் நன்மைகள் பல செய்கிறவராய் சுற்றித் திரிந்தார். அவருடைய வார்த்தைகளில் வல்லமை பொங்கி வழிந்தபடியால் பிசாசுகளைத் துரத்தவும், அநேக அற்புதங்கள் செய்யவும் அவரால் முடிந்தது. அதன் மூலம் அவருடைய கீர்த்தி பக்கத்து பிரதேசங்களுக்கும் வேகமாய் பரவிற்று. அவருடைய வல்லமையைப் பற்றி கேள்விப்பட்ட ஜனங்கள், அவருடைய போதகத்தைக் கேட்கவும் அவராலே குணம் பெறவும் திரண்டு வந்தனர் (மத் 4:24, 25). பெருங்கூட்டம் முண்டியடித்து அவரை நெருக்கி நின்றபடியால் கூடி வந்தவர்களில் அநேகர் அவர் முகத்தைப் பார்க்கவோ அவருடைய பேச்சை சரியாகக் கேட்கவோ முடியாத ஒரு நிலை இருந்தது. இதைக் கண்ணுற்ற இயேசுக் கிறிஸ்து அனைவரும் தன்னுடைய சொற்பொழிவை கேட்க விரும்பி மலையின் மீது ஏறி பிரசங்கிக்கத் தொடங்கினார்.

அழியாப் புகழைப் பெற்றுக் கொண்ட இந்த மலை எந்தப் பகுதியிலிருந்தது என்று நமக்குத் தெளிவாக சொல்லப்படவில்லை. ஆனால் நாசரேத்துக்குக் கிழக்கே உள்ள தாபோர் மலைக்கும் திபேரியஸ் மலைக்கும் இடைப்பட்ட பகுதியாக இருக்கலாம் என்று நம்பப்படுகின்றது. கலிலேயாக் கடற்கரையிலிருந்து இம்மலைப் பகுதியை எளிதில் காணலாம். இது கடற்பரப்பிலிருந்து சுமார் 60 அடிகள் உயர்ந்து நின்றது. கடற்கரையிலிருந்து சுலபமாக அணுகக் கூடிய இடம்.

அவர் உட்கார்ந்து பிரசங்கிக்கத் தொடங்கினார் என்று வேதத்தில் காண்கிறோம் (5:1, 2) உட்கார்ந்து உபதேசிப்பது யூதர்களுக்குள்ளாக இருந்த வழக்கம். அவர் பிரசங்கிக்க உட்கார்ந்த பொழுது அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்தார்கள் என்று காண்கிறோம். இங்கே சீடர்கள் என்பது அவரால் தெரிந்து கொள்ளப்பட்ட 12 பேர்கள் அல்ல. அவரைச் சுற்றிமிலுருந்த திரளான ஜனங்கள் தான் சீடர்களாகச் சொல்லப்படுகிறார்கள். சீடன் என்றால் கற்றுக் கொள்கிறவன் எனப் பொருள். ஆக இங்கே, இயேசு பிரசங்கிக்கத் தொடங்கி போதகராகும் பொழுது கேட்கிற ஜனங்கள் கற்றுக்கொள்கிற சீடர்கள் ஆகிறார்கள் அவ்வளவே. மலைப் பிரசங்கம் மத்தேயு 5, 6, 7 ஆகிய அதிகாரங்களில் பரவிக் கிடக்கிறது. ஐந்தாம் அதிகாரத்தில் முதல் பன்னிரண்டு வசனங்களை பாக்கிய வசனங்கள் (Beatitudes) என்று வேத அறிஞர்கள் பிரித்துள்ளனர். இப்பகுதியிலுள்ள வசனங்களின்படி

வாழ்ந்தால் பாக்கியம் பெற்றவர்களாக, தேவ ஆசீர்வாதம் உள்ளவர்களாக இருக்க முடியும் என்பதே அதன் பொருள். தொடர்ந்து வரும் நான்கு வசனங்களை (5:13-16) ஆங்கிலத்தில் (Similitude) என்றழைக்கின்றனர். அதாவது, பாக்கிய வசனங்களுக்கு இணையான, சற்றும் குறையாத ஆசீர்வாதத்தைக் கொடுக்கக் கூடியதாகும்.

சரி, நம்முடைய சிந்தனைக்குண்டான பகுதி ஐந்தாம் அதிகாரம் 13-ம் வசனத்தின் முற்பகுதி மாத்திரமே. "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்பதே.

வசனம் 14-ல் சீடர்களே "நீங்கள் உலகத்துக்கு ஒளியாயிருக்கிறீர்கள்" என்று சொல்வதற்கு முன்பாக "நீங்கள் பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்" என்று கூறுகிறார். இந்நாட்கள் இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தின் ஆரம்ப நாட்கள். யோவான் ஸ்நானகனைப் போல் கிறிஸ்துவும் "பரலோக ராஜ்யம் சமீபித்துக் கொண்டிருக்கிறது" எனப் பிரசங்கித்துக் கொண்டிருந்த நேரம் அது. வரப்போகும் இராஜ்யத்தின் புத்திரர் உப்பைப்போலும், ஒளியைப்போலும் இருக்க வேண்டும் என பிரசங்கிக்கிறார். முதலில் உப்பைப் பற்றி கூறுவதால் வெளிப்புறக் கிரியைகளைக் காட்டிலும் உட்புறக் கிரியை மிக முக்கியம் என்பதை எடுத்து காட்டுகிறார். ஒருவனின் உள்மனம் எப்படியிருக்கிறதோ அதனடிப்படையில் தான் அவனுடைய வெளிப்புறக் கிரியைகள் இருக்குமென்பதே அதன்பொருள்.

இயேசுக் கிறிஸ்துவின் அளவற்ற ஞானத்தை அவருடைய உவமைகள் மற்றும் எடுத்துக்காட்டுகளிலிருந்து நாம் கண்டு கொள்ள முடியும். ஆம், பாமரரும், படித்தவரும், ஏழையும், பணக்காரனும் புரிந்து கொள்ளும்படியாகவே பேசுவார். உப்பின் தன்மை மற்றும் அதன் குணம் தெரியாமல் இப்பூமியில் ஒருவன் வாழமுடியுமா? அல்லது ஒளியைப்பற்றி அறியாமல் ஒருவன் காலம் தான் தள்ள முடியுமா?

அநந்த ஞானம் நிறைந்த இயேசுக்கிறிஸ்து "பூமிக்கு உப்பு" என்ற சொன்ன பொழுது, போகிற போக்கில் அல்லது மேலெழுந்தவாரியான ஒரு கருத்தினடிப்படையில் அதைச் சொல்லாமல், ஆழ்ந்த அர்த்தத்திதோடு பொருள் பொதிந்த பாணியிலேயே சொல்லியுள்ளார். உப்பைப் பற்றியதான சகல அறிவையும் அறிந்தே அறிவித்துள்ளார். அவரைப் பின்பற்றும் சீடர்கள் "பூமிக்கு" உப்பைப் போல இருக்க வேண்டுமென்று இயேசுக்கிறிஸ்து எதிர்பார்த்துக் கொண்டிருப்பதால் அவருடைய நியாயமான எதிர்பார்க்குதலை நிறைவேற்ற நாம் ஆயத்தமா? இங்கே சொல்லப்படும் உப்புக்கு பல பண்புகள் உண்டு.

அப்பண்புகளில் சிலவற்றைக் கண்டுபிடித்து, அவைகளை நம்முடைய வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்ப்போம்.

## 1. உப்பு சுத்தமானது

உப்பின் நிறம் வெண்மை. இந்நிறம் தூய்மைக்கும் சுத்தத்திற்கும் அடையாளமானது. இந்த சுத்தமான கலப்படமற்ற உப்பை இயேசுக்கிறிஸ்துவின் நாட்களில் ரோமானியர்கள் மிகவும் மதித்தனர். இதற்கு பலமான காரணம் உண்டு. இரண்டு மாபெரும் இயற்கைச் சக்திகளான சூரியன் மற்றும் கடல் இவைகளைக் கொண்டு கிடைத்ததே அதற்கு காரணம். இயற்கை சக்தியினிடமிருந்து கிடைத்த சுத்தமான உப்பு, மதிப்பிற்குரிய ஒன்றாக இருந்துள்ளது.

உப்பைப்போல் நாமும் சுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதே இயேசுக் கிறிஸ்துவின் எதிர்பார்ப்பு. இந்த சுத்தம் தேவனால் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது. (1 பேது 2:9) தேவன் கொடுக்கும் சுத்தம் வெறும் சுத்தம் என்று அழைக்கப் படாமல்"பரிசுத்தம்" என்றழைக்கப்படுகிறது. "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றி லேயும் பரிசுத்தராயிருங்கள்" (1 பேது 1:15) ஏனெனில் அழைத்த தேவன் பரிசுத்தர்.

இயற்கைச் சக்தியிடமிருந்து கிடைத்த உப்பை அன்று ரோமானியர்கள் மதிப்புள்ளதாகக் கருதியது உண்மையானால், தன்னுடைய வார்த்தையின் வல்லமையால் இயற்கையை உள்ளடக்கிய அண்ட சராசரங்களையும் உண்டாக்கின தேவனிடமிருந்து கிடைத்த பரிசுத்தத்தை நாம் மதித்து நடப்பது எவ்வளவு முக்கியமானது என்பதை எண்ணிப் பாருங்கள். பாவ அசுத்தத்தில் ஜீவித்துக் கொண்டிருந்த நாம் சுத்தமாக மாத்திரமல்ல பரிசுத்தமாகவும் மாற்றப்பட்டுள்ளோமே! அதைக் குறித்த மகிழ்ச்சியும், மதிப்பும் நமக்கு உண்டாத? அந்த பரிசுத்தம் காப்பாற்றப்பட வேண்டுமென்ற வாஞ்சை உண்டா? ஐயோ, தேவன் கொடுத்த பரிசுத்தம் குலைச்சலாகிவிடக் கூடாது என்ற பயம் உண்டா?

## 2. உப்பு பாதுகாக்கக் கூடியது

உப்பின் பண்புகளில் பிரதானமானது அதற்கிருக்கும் பாதுகாக்கும் குணம். உணவுப் பண்டங்கள், பச்சைத் தோல், மாமிச வகைகள் போன்றவற்றைப் பாதுகாத்து பிரயோஜனமுள்ளவைகளாக மாற்றுகிறது.

சரி, உப்பைப்போல நாம் எப்படி பாதுகாக்கும் குணத்தை பெற்றுக் கொள்வது? எந்த வகையில் எதைப் பாதுகாக்கவேண்டும்? 1 தீமுத் 3:15 சொல்வதை கவனிப்போம், ''..... அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது'' இங்கே, சபையானது, சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது என்று பவுலடியார் சொல்கிறார். சபை என்றால் ஒரு கட்டிடம் அல்ல என்றும் அது வசனத்துக்குத் தங்களை ஒப்புக்கொடுத்த அழைக்கப்பட்ட வர்களின் கூட்டம் என்றும் நமக்குத் தெரியும்.

அதாவது சத்தியத்தைத் தாங்கி பிடிப்பது - விழுந்து போகாமல் காப்பாற்றுவது சபையின் மிக முக்கிய வேலை. இப்பொழுது விளங்குகின்றதா நாம் எதைப் பாதுகாக்க வேண்டுமென்று? ஏன் சத்தியத்தைப் பாதுகாக்க வேண்டும்? இன்று உலகத்தின் மத்தியில், சமுதாயத்தின் மத்தியில் சத்தியமானது ஒரு கேலிப் பொருளாகி வருகின்றது. சத்தியம் ஒரு மலிவான கடைச் சரக்காகி கலப்படம் செய்யப்பட்டு எந்த விலைக்கு வேண்டுமானாலும் விற்கப்படுகிறது. அதனுடைய மேன்மை மறைக்கப்படுகிறது. அதன் பரிசுத்தம் குலைக்கப்படுகிறது.

டிசம்பர் மாதம் 25-ம் தேதி உலகெங்குமுள்ள கிறிஸ்தவ சமுதாயத்திற்கு ஒரு முக்கியமான நாள். இந்த நாளை இப்படி விசேஷித்த நாளாகக் கருத வேதாகமத்தின் அனுமதி இருக்கிறதா என்பது வேறு விஷயம், அதைக் குறித்து ஆராய நான் இங்கு விரும்பவில்லை. ஆனால் கடந்த மாதம் 25-ந் தேதியில் சிறப்புச் செய்திகள் வழங்கிய தலைவர்கள்? எல்லா மதங்களைப் போல கிறிஸ்தவமும் ஒன்று தான் என்று பேசினார்களேயொழிய, கிறிஸ்தவம் முற்றிலும் மாறுபட்டது என்றோ, கிறிஸ்து ஒன்றான மெய்தேவன் என்றோ சொல்ல முற்படவில்லை. சுயநலத்திற்காக, சத்தியத்தை புரட்டும் இந்த மதத் தலைவர்களும் அவர்களைப் பின்பற்றும் கூட்டமும் இன்று சத்தியத்தின் எதிரிகள் உலகத்தால் அங்கீகரிக்கப்பட்டு மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்த மத வியாபாரிகளிடமிருந்து அவருடைய உண்மைச் சீடர்கள் சத்தியத்தைப் பாதுகாக்க வேண்டுமென எதிர்பார்த்துதான் இயேசு பெருமான் நீங்கள் ''பூமிக்கு உப்பு'' என்று சொல்லியுள்ளார். ஆகவே தான் அப்போஸ்தலன் யூதா ''. . . . பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு

அவசியமாய்க் கண்டது.'' என்று சொல்லியுள்ளார். (யூதா. 3) போராடுவோமா?

## 3. உப்பு ருசி கொடுக்கிறது

உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்றொரு பழமொழி உண்டு இதன் பொருள் எல்லாப் பண்டங்களுக்கும் உப்பு தேவை என்பதே. ஒரு பதார்த்தத்தைச் செய்ய எல்லாமே போட்டு, உப்புப் போட மறந்துவிட்டால் அது ருசிக்காது.

ஒருவேளை போடும் உப்பின் அளவு போடப்பட்ட மற்றப் பொருள்களின் அளவைவிடக் குறைவாக இருந்தாலும், ஒட்டுமொத்த சுவையையே மாற்றக்கூடியது. நம்முடைய சமுதாயத்தில் கிறிஸ்தவர்களாகிய நாம் குறைவானவர்களாக இருக்கலாம். அதைப்பற்றி ஒருபோதும் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. நம்மால் என்ன முடியும் என்றும், நாம் சொல்லி யார் கேட்கப் போகிறார்கள் என்றும் எண்ணத் தேவையில்லை. தனி மனிதனாக இருந்தாலும் கர்த்தருடைய பட்சத்தில் நாம் நின்றால் நாம் தான் மெஜாரிட்டி "இவைகளை குறித்து நாம் என்ன சொல்லுவோம்? தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?'' (ரோம. 8:31)

ஆகவே நம்முடைய எண்ணிக்கையை கணக்கிலெடுத்துக் கொண்டு, சோர்ந்து போக வேண்டிய அவசியமில்லை. வேதாகம சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள். தேவனுக்கு பயந்தவர்கள் எப்பொழுதுமே குறைவானவர்கள்தான். ஆனால் அந்தந்தக் கால கட்டங்களில் வாழ்ந்த அவர்கள், தங்களுடைய சமுதாயத்திற்கு பயன்படக்கூடியவர்களாக இருந்தனர். ஒரு யோசேப்பினிமித்தம் தேவன் ஒரு தேசத்தையே ஆசீர்வதித்தார் என்று ஆதியாகமம் கூறுகிறது. (ஆதி. 39:5) யோப்பா பட்டணத்தில் இருந்த சகோதரி தொற்காள் விதைவைகளுக்கும் ஏழைகளுக்கும் பயன்படும் ஒரு வாழ்க்கை வாழ்ந்தாள் (அப் 9:39) இப்படி இன்னும் அநேகரைச் சொல்லமுடியும்.

ஆகையால் மற்றவர்களுக்குப் பயன்படுகிற காரியத்தில் உப்பைப்போல நாம் இருக்க வேண்டும். உப்பானது ருசி கொடுக்கும் பொழுது தன்னை அழித்துக் கொள்வதைப் போல், தேவையானால், நாமும் நம்முடைய சொந்த நலன்களை அழித்துப் பயன்படவேண்டும். இதைத்தான் பவுல் கலாத்தியருக்கு சொல்லும் பொழுது இரத்தினச்

சுருக்கமாக சொல்கிறார் "நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல இருப்போமாக..." (கலாத் 6:9, 10) என்று.

நன்மை என்று சொல்லும்பொழுது ஒருவனுக்கு நாம் செய்யும் நன்மைகளில் பிரதானமானது ஆத்தும நன்மை தான். சரீர நன்மைகள் ஒருவனுக்கு குறைந்த காலத்துக்குத் தான் பயன்தரும். ஆனால் ஆத்தும நன்மை ஒருவனுக்கு நித்திய நித்தியமாய் நன்மை தரக்கூடியது என்பதை நாம் மறக்க வேண்டாம்.

## 4. உப்பு தாகத்தை ஏற்படுத்துகிறது

"உப்பை தின்றவன் தண்ணீர் குடித்தாக வேண்டும்" என்று சொல்லுவதுண்டு. அதாவது தாகத்தை ஏற்படுத்தும் குணம் உப்புக்கு உண்டு என்பது தான் அப்படிச் சொல்வதற்கு காரணம்.

இது மற்ற குணங்களைக் காட்டிலும் விசேஷமான ஒன்று. ஏனெனில் தன்னுடைய செயல்பாட்டைக் கொண்டு மற்றவர்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் குணம். தன்னுடைய கிரியைகள் மூலம், மற்றவர்களைச் செயல்பட வைக்கும் குணம். அவரைப் பின்பற்றும் சீஷர்களிடமும், வசனத்தினடிப்படையில் அவரை ஏற்றுக்கொள்ளும் கிறிஸ்துவர்களிடமும் இவ்வருங்குணம் இருக்க வேண்டுமென்று விரும்பியே இயேசுகிறிஸ்து "நீங்கள் பூமிக்கு உப்பு" என்று சொல்லியிருப்பார்.

அப்படியானால் நாம் எந்தவிதமான தாக்கத்தை - தாகத்தை ஏற்படுத்திக் கொண்டுள்ளோம். கிறிஸ்து ராஜா கொடுத்த பிரதான கட்டளை இவ்விதமாகச் சொல்கிறது. ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து...." (மத் 28:19) என்று சொல்கிறது. சகல ஜாதிகளையும் எப்படி சீஷராக்க முடியும்? நிர்பந்திப்பதா? மிரட்டுவதா? கட்டாயச் சட்டம் போடுவதா? எப்படி? எப்படி?

மற்றவர்களுக்கு சுவிசேஷம் சொல்வதற்கு பிரசங்கமுறை அதிக மாகப் பயன்படுகிறது. ஆனால் அதைக் காட்டிலும் சிறந்த பலனை சாட்சியின் ஜீவியத்தின் மூலம் எதிர்பார்க்கமுடியும். "Deeds are lounder than words" என்று ஒரு பழமொழி உண்டு. சுவிஷேசப் புத்தகங்களில் [redacted] "பரிசேயர்கள்" பேசுவதில் - பிரசங்கிப்பதில் வல்லவர்கள்.

ஆனால், வாழ்க்கையோ பூஜ்யம். அவர்கள் ஆன்மீக வாழ்வின் அழிவுக்கு அது தான் அஸ்திபாரமாயிற்று.

பகீரதப் பிரயத்தனம் செய்தும் கிறிஸ்துவுக்கு எதிரான நிலையில் அவர்கள் முழுத்தோல்வி பெற்றதற்குக் காரணம் ஜீவிய முறைதான். இயேசுக் கிறிஸ்து சிலுவையிலறையப்பட்ட பொழுது, அவர்களுக்கு வெற்றி கிட்டுவது போல் தெரிந்தது. ஆனால் அவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பிறகு என்ன நடந்தது என்பதை நாம் அறிவோம்.

ஆகையால் உப்பைப்போல நாம் செயல்பட்டு மற்றவர்களின் நிலையில் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய ஒரு வாழ்வை வேத வசனங்களை ஆதாரமாகக் கொண்டு வாழவேண்டும். உப்பின் இந்த செயல்பாடு நம்மிடம் தெரியவேண்டும். தேவன் இதை நிச்சயமாக எதிர்பார்க்கிறார்.

அன்பான சகோதரரே, நண்பரே தேவனின் பெரிதான கிருபையால் நமக்கு ஒரு ஆண்டு கிருபையாக கூட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் நம்முடைய செயல்பாடு எப்படி அமையப் போகிறது. இயேசுகிறிஸ்து பிரசங்கித்த இராஜ்யத்தின் புத்திரராக நாம் இருப்பின் அவர் பிரசங்கித்துள்ளதைப் போல், உப்பைப்போல் பரிசுத்தமானவர்களாக, சத்தியத்தை பகைவர்களிட மிருந்து பாதுகாப்பவர்களாக, மற்றவர்களுக்கு ருசி கொடுக்கிற வர்களாக, அநேகர் நம்முடைய வாழ்க்கையின் மூலம் கிறிஸ்துவைக் காண்கிறவர்களாக இருப்போம்.

ஒருவேளை கிறிஸ்து பிரசங்கித்த இராஜ்யமாகிய சபையில் — கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்கமல் இருந்தால், வேதவசனங்கள் அறுதியிட்டுச் சொல்லும் ஒரே சபையாகிய கிறிஸ்துவின் சபையில் விசுவாசித்து (எபி 11:6), மனந்திரும்பி (லூக் 13:5), அறிக்கையிட்டு (மத் 10:32), ஞானஸ்நானம் பெற்று (அப் 22:16) அங்கம் வகித்து (அப் 2:47) இந்தப் புதிய ஆண்டில் கிறிஸ்துவுக்காய் வாழுவோம்! உப்பைப் போல் பிரயோஜனமான வாழ்வு வாழ்வோம்.

EZS. ராஜநாயகம்

# அந்நிய பாஷைகளில் பேசுதல்

பரிசுத்த ஆவியானவரின் பணி என்னும் தொடரில் இந்த அத்தியாயத்தில் இப்போது நாம் அந்நிய பாஷைகளில் பேசுவது பற்றிப் பார்ப்போம்.

முக்கியமாக பெந்தெகொஸ்தே இயக்கங்களிலும் இன்ன பிற மதக்குழுக்களிலும் கூட, தேவனுடைய பிள்ளைகள் இன்று பரிசுத்த ஆவியானவரைப் பெறுகின்றனர் எனவும் அதன் அடையாளமாக அதைப் பெற்றுக் கொண்டவர்கள் அந்நிய பாஷைகளில் பேசுகின்றனர் என்னும் நம்பிக்கை உள்ளது. யாருக்கும் புரியாத சில விநோதமான சத்தங்களை எழுப்புவதும், இது என்ன என்று கேட்பவர்களிடம் அது தேவன் புரிந்து கொள்ளும் பரலோக பாஷை என்றும் கூறி, அதுவே அந்நிய பாஷை என்றும் சொல்லுகின்றனர். சிலவேளைகளில், அவர்களில் ஒருவன் பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொண்டதாக அறிவிக்கப்பட்ட பின்னும் அந்த வேடிக்கையான சத்தங்களை எழுப்ப முடியாமல் இருந்தால், கட்டாயத்தின் பேரில் அவர்களைப் பின்பற்றி ஏதாவது உளறும் போது அவன் ஏற்றுக் கொள்ளப்படுகிறான். இது அவர்களைப் பற்றி நாம் கற்பனையாகக் கூறுவது அல்ல. அந்த இயக்கத்தில் இருந்தவர்களே அவர்களுடைய தவறான போதனைகளைக் கண்டபின் அவர்களை விட்டு விலகி வெளியே வந்து கூறியவைகளைத் தான் மேலே சொன்னோம்.

ஆனால் இந்தக் காரியத்தைப் பற்றி வேதாகமம் என்ன சொல்லுகிறது என்று காண, நாம் இப்போது சுவிசேஷத்திற்குச் செல்வோம். தாம் சென்றபின் பரிசுத்த ஆவியை அப்போஸ்தலர்களிடம் அனுப்புவதாக கிறிஸ்து வாக்களித்தார். (யோவான் 14:26). அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்குப் பெற்றதும் அதின் அடையாளங்களில் ஒன்றாக "ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளினவரத்தின்படியே" வெவ்வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள். (அப். 2:1-4) வசனம் மேலுமாக கூறுகிறது. "வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவ பக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம் பண்ணினார்கள். அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷைகளிலே அவர்கள்

பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்க மடைந்தார்கள். (அப் 2 : 5-6) என்கிறது.

மேலும் தொடரும்போது, கூடி வந்திருந்த பலநாட்டு மக்களும் ஆச்சரியமும் குழப்பமும் அடைந்தனர். எளிய, கல்வி அறிவற்ற கலிலேயர்கள் தானே இவ்வாறு பல மொழிகளில் பேசுவதால் அவர்கள் குடிபோதையில் இருக்க வேண்டுமென்று முடிவு செய்தனர். என்றாலும், மக்கள் நினைப்பதைப் போல அவர்கள் குடித்திருக்கவில்லை என்றும், அது காலை வேளையாக இருப்பதையும் பேதுரு அவர்களுக்கு விளக்குகிறார். மேலுமாக, அங்கே நடந்தவை யாவும் யோவேல் தீர்க்கதரிசியால் ஏற்கனவே முன்னறிவிக்கப் பட்டபடி, கடைசி நாட்களில் மாம்சமான யாவர் பேரிலும் எவ்வாறு கர்த்தர் தமது ஆவியை ஊற்றுவதாகக் கூறினாரே அதுவே அங்கு நடந்து கொண்டிருந்தது. (அப். 2:7-17) வேறு விதமாகச் சொன்னால், அப்போஸ்தலர்களை அவர் பரிசுத்த ஆவியானவரால் திருமுழுக்குப் பெறச்செய்தார்; குறிப்பிட்ட சில சீடர்கள் கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றனர்; தேவனுக்குக் கீழ்ப்படிந்த பிற எல்லா மக்களும் அற்புதங்கள் செய்ய இயலாத கொடை அல்லது அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றனர்.

பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றதின் விளைவாக, ஏற்கனவே குறிப்பிட்டபடி, அப்போஸ்தலர்கள் அந்நிய பாஷைகளில் பேசக் கூடியவர்களாக இருந்தனர். உலகின் பல பகுதிகளிலுமிருந்து வந்த, பல்வேறு மொழிகள் பேசும் பல மக்களிடம் அவர்கள் பேச வேண்டியதிருக்கும் எனக் கர்த்தருக்குத் தெரியும். எனவே, அவர்கள் எங்கிருந்த போதிலும் அங்குள்ள மக்களின் பிராந்திய மொழிகளில் பேசக்கூடிய திறமையை அவர் அவர்களுக்குக் கொடுத்தார். அவர்கள் தேவனுடைய விருப்பத்தை அறிவிக்க அவரால் அனுப்பப்பட்டவர்கள் என இந்த மக்களைத் திருப்திப்படுத்தவும், கர்த்தருடைய உபதேசத்தை விரைவிலே பல இடங்களுக்கு அறிவிக்க உதவவும் இது ஒரு வழியாக இருந்து. அதாவது, பிராந்திய மொழிகளைக் கற்றுக் கொள்ள நேரத்தை செலவிட வேண்டியதுமில்லை, அல்லது மொழி பெயர்ப்பாளர்களை உபயோகிக்கத் தேவையுமில்லை. ஆனால் வேற்று மொழி மக்களிடம் அவர்களுடைய மொழிகளிலேயே நேரிடையாக பேச முடிந்தது.

அதோடு, அப்போஸ்தலர்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையைக் கொடுத்த எல்லாரும் அந்நிய பாஷைகளில் பேச முடிந்தது. ஒரு மக்கள் கூட்டத்தை பவுல் மனந்திருப்புதலை

அப்போஸ்தலர் நடபடி 19-ம் அதிகாரத்தில் நாம் படிக்கிறோம். குறிப்பேடு தொடர்ந்து கூறுகிறது : "அல்லாமலும் பவுல் அவர்கள் மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்த ஆவி அவர்கள் மேல் வந்தார்; அப்பொழுது அவர்கள் அந்நிய பாஷைகளைப் பேசி தீர்க்கதரிசனஞ் சொன்னார்கள்." (அப். 19:6) அப்போஸ்தலர்கள் மொத்தம் 12 பேர்கள் மட்டுமே என்பதும், பின்னராக பவுல் அழைக்கப்பட்டு மொத்தம் 13 பேர்கள் மாத்திரமே இறுதியாக இருந்தனர் என்பது கர்த்தருக்குத் தெரியும். அவர்கள் பல திசைகளுக்கும் செல்லுவார்கள், அவர்களுக்கு உதவி தேவை என்பதும் அவருக்குத் தெரியும். எனவே, தேர்ந்தெடுக்கப்பட்ட சில சீடர்களின் மேல் கைகளை வைத்து அவர்களும்கூட பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றுக் கொள்ளத்தக்கதாக அப்போஸ்தலர்களுக்கு கர்த்தர் அனுமதி அளித்தார். அவ்வாறு கைகளை வைத்துப் பெறும் அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்ட அடையாளத்தின் ஒரு பகுதியாக அவர்களும் அந்நிய பாஷைகளில் பேசக்கூடிய வல்லமை பெற்றனர்.

அப்போஸ்தலர் நடபடி 2:38-ம் வசனத்தில் குறிப்பிட்டபடி, சாதாரண அளவிலான பரிசுத்த ஆவியை, அல்லது அற்புதங்கள் செய்ய இயலாத அளவிலான பரிசுத்த ஆவியைப் பெற்றவர்களின் நிலை என்ன? அவர்கள் அந்நிய பாஷைகளில் பேச முடிந்ததா? இல்லை அவர்களால் முடியவில்லை. அவர்கள் அவ்வாறு அந்நிய பாஷையில் பேசியதாக புதிய ஏற்பாட்டில் எங்கும் ஒரு உதாரணம் கூட காணப்படவில்லை. மேலும், இன்று அப்போஸ்தலர்கள் ஒருவரும் இல்லையாதலாலும், அவர்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியின் வல்லமையைக் கொடுத்தவர்கள் அனைவரும் மரித்து போய் விட்டதாலும், அப்போஸ்தலர்களுடைய காலத்தில் நடந்ததைப் போல, இன்று யாரும் அந்நிய பாஷையில் அற்புதமாக பேச முடியாது. ஆனால் அப்படிச் செய்வதாக உரிமை கொண்டாடுவோர் இன்று இருக்கின்றனர். என்றாலும் அவர்கள் செய்வதெல்லாம் யாருக்கு புரியாத உளறலான சத்தங்களை உண்டாக்குவதைத் தவிர வேறல்ல. உலகின் பிற பாகங்களுக்கு இவர்கள் செல்லும் போது அந்தப் பகுதியில் பேசப்படும் பாஷைகளை நேரம் எடுத்துக் கற்றுக் கொள்ளுகின்றனர் அல்லது மொழியாக்கம் செய்யும் நபர்களை உபயோகிக்கின்றனர். அந்நிய பாஷையில் பேசுவதாக உரிமை கோரும் எல்லா பிரசங்கிமார்களும் பிறநாடுகளுக்குச் செல்லும் போது அவர்களுடைய பிரசங்கங்களை மொழியாக்கம் செய்ய வேறு யாரையாவது தேடி அமர்த்திக் கொள்ளுகிறார்கள். அதுவே அவர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெறவில்லை என்பதை

நிரூபிக்கிறது. எனவே அந்நாட்களிலே அப்போஸ்தலர்கள பேசியதைப் போல அந்நிய பாஷைகளில் இவர்களால் பேச முடிவதில்லை.

அந்நிய பாஷை என்றால் என்ன? அதற்கு அர்த்தம் அதுவேதான்! நமக்குத் தெரியாத அந்நியமான ஒரு மொழி. அந்த மொழியைப் பேசுகிற எவரும் அங்கு இல்லையென்றால், அல்லது மொழியாக்கம் செய்யவும் ஒருவரும் இல்லையென்றால், அந்நபர் அமைதியாக இருக்கவேண்டுமென புத்திமதி கூறப்பட்டது. பவுல் கூறுகிறார் : "உங்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பாஷைகளைப் பேசுகிறேன், இதற்காக என் தேவனை ஸ்தோத்தரிக்கிறேன். அப்படியிருந்தும், நான் சபையிலே அந்நிய பாஷையில் பதினாயிரம் வார்த்தைகளை பேசுகிறதிலும், மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுகிறதே எனக்கு அதிக விருப்பமாயிருக்கும்." (1 கொரி. 14: 18, 19) பலமொழிகளில் பேசும் வல்லமையை தான் பெற்றிருந்ததாகப் பவுல் இங்கு கூறுகிறார். என்றாலும், புரிந்து கொள்ள முடியாத பதினாயிரம் வார்த்தைகளைவிட, புரிந்து கொள்ளக் கூடிய ஐந்து வார்த்தைகளைப் பேசுவதையே தாம் விரும்புவதாகக் கூறினார்.

பவுல் மேலுமாக கூறும்போது, அந்நிய பாஷையில் பேசுவது அவிசுவாசிகளுக்கு ஒரு அடையாளமாக இருந்ததே தவிர, சபைக்கு அல்ல என்கிறார். "அப்படியிருக்க, அந்நிய பாஷைகள் விசுவாசிகளுக்கு அடையாளமாக இராமல், அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருக்கிறது; தீர்க்கதரிசனமோ அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிராமல் விசுவாசிகளுக்கு அடையாளமாக இருக்கிறது." என அவர் கூறினார். (1 கொரி. 14:22). அப்போஸ்தலர்களும் அவர்கள் கைகளை வைத்து பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டவர்களும் அந்நிய பாஷையில் பேசும் காரணங்களில் ஒன்று. அவர்கள் தேவனால் அனுப்பப்பட்டவர்கள் என்பதை மக்கள் நம்பச் செய்யவும், அதின் வழியாக அவர்களில் விசுவாசிகளை உண்டாக்கவும் என்பதாக நாம் ஏற்கனவே சுட்டிக் காட்டியுள்ளோம். அதையே தான் பவுல் இங்கு சொல்லிக் கொண்டிருக்கிறார். ஆனால் இன்றைய நவீன உலகில் அந்நிய பாஷைகளைப் பேசுவதாக கூறப்படும் ஆராதனைக் கூட்டங்களுக்குச் சென்றால், அங்கு விசுவாசிகளைக் கொண்டு ஏற்படுத்தப்பட்ட ஒரு கூட்டத்தைக் காணலாம். இதிலும் கூட, சுவிசேஷத்தில் கூறப்பட்ட முறைகளை அவர்கள் பின்பற்றுவதில்லை.

இறுதியாக, அந்நிய பாஷைகள் ஒரு கால கட்டத்தில் ஒழிந்து போகும் என்று பவுல் கூறினார். அதாவது அற்புதமாக அந்நிய பாஷையில் பேசுவது ஒழிந்து போகும் காலம் ஒன்று வரும் என அவர் கூறினார். அது எப்போது வருவதாக இருந்தது? இறுதியாக புதிய ஏற்பாடு முற்றிலுமாக எழுதப்பட்டு மனிதனுக்குக் கொடுக்கப்பட்ட வேளையில் அது முடிந்து போகும் காலம் வரும் எனப் பவுல் கூறினார்: "அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்க தரிசனங்களானாலும் ஒழிந்துபோம்; அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்து போம், அறிவானாலும் ஒழிந்துபோம் நம்முடைய அறிவு குறைவுள்ளது, நாம் தீர்க்க தரிசனம் சொல்லுதலும் குறைவுள்ளது. நிறைவானது வரும் போது குறைவானது ஒழிந்து போம்." (1 கொரிந்தியர் 13: 8-10) நிறைவானது அல்லது பூரணமானது என அவர் இங்கு கூறுவது எதைப்பற்றி? சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணம் என புதிய ஏற்பாட்டைக் குறிப்பிட்டு யாக்கோபு கூறுகிறார். புதிய ஏற்பாடு கொடுக்கப்படும் வரையில், மனிதனுக்கு உதவியாக இருக்க மட்டுமே அற்புதங்கள், அந்நிய பாஷைகள் போன்றவை நடந்தன. ஆனால் ஒருமுறை புதிய ஏற்பாடு வந்த பின்னர் இவை அனைத்தும் இனி தேவைப்படவில்லை.

பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றுக் கொண்டதாகவும், அதின் காரணமாக அற்புதங்களைச் செய்யும் அந்நிய பாஷைகளைப் பேசவும் கூடும் என இன்று உரிமை கொண்டாடும் அனைவரும் பிரிவினைவாதிகளாக இருக்கின்றனர், ஒருவரை ஒருவர் எதிர்க்கின்றனர், மனிதப் பெயர்களை தங்களுடைய குழுக்களுக்கு வைத்துக் கொள்ளுகின்றனர், புதிய ஏற்பாட்டில் காணப்படாத சபையில் அங்கத்தினர்களாகி இருக்கின்றனர் என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். இப்படியாக வெவ்வேறு பிரிவினை சபைகளைச் சார்ந்தவர்கள் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றிருப்பதாக எப்படி உரிமை கொண்டாட முடியும்? பரிசுத்த ஆவியானவர் அவர்களிடம் இல்லை என்பது மட்டுமல்ல, ஆனால் அவர்கள் ஏமாற்றப்பட்டிருப்பதோடு, அவர்களுக்குச் செவி சாய்ப்போரையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர். இப்படிப் பட்டவர்கள் உங்களிடம் வந்து, உங்களை ஏமாற்றி திசை திருப்பிவிட அனுமதிக்காதீர்கள் பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய சத்தியங்களுக்கும், நமது இரட்சிப்பு சம்பந்தப்பட்ட பிற எல்லா காரியங்களுக்கும், நித்தய வாழ்விற்கான நம்பிக்கைக்கும் சுவிசேஷத்திற்கு மட்டுமே திரும்புங்கள்.

J.C. சோட்

## பெண்கள் பகுதி

# குழந்தைகளே, இயேசுவை அறிந்து கொள்வீர்!

"தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." (யோவான் 3:16)

பேதுருவும் மரியாளும் தினந்தோறும் சிறிது நேரத்தை ஒதுக்கி தங்கள் பிள்ளைகளோடு தேவனுடைய வார்த்தையைக் கற்றுக் கொள்ள முயற்சிக்கின்றனர். தங்களுடைய பிள்ளைகள் விஞ்ஞானம், மொழிகளுக்கு போன்ற உலகப் பாடங்களுக்காக மணிக்கணக்கில் தினமும் செலவிடும் போது, மறைக் கல்வியையும் தங்களின் பிள்ளைகள் கற்றுக் கொள்ள நேரம் ஒதுக்க வேண்டும் என்றும் அந்தப் பொறுப்பு தங்களுக்கு உண்டு என்றும் அவர்கள் உணர்ந்தனர். தங்கள் பிள்ளைகள் கிறிஸ்தவர்களாகப் பயிற்சி பெறுவதில் பெரும்பங்கு விட்டு சூழ்நிலையில் தான் என்பதில் சந்தேகமில்லை எனக் கருதினர். வீட்டிலே நல்ல வார்த்தைகளைப் பேசுவது தேவனுடைய வசனங்களின்படியாக அன்றாட வாழ்க்கையில் தரமுடனும், கொள்கையுடனும் தாங்கள் நடப்பதை பிள்ளைகள் கவனித்து அவர்களைப் பின்பற்றுவார்கள் என்பதையும் உணர்ந்திருந்தனர். வேதாகமத்தை ஒழுங்காக, குடும்பமாகக் கற்றுக் கொள்வதின் அவசியத்தையும் அவர்கள் புரிந்தனர்.

"நேற்று இரவு அம்மாவிடம் தேவனைப் பற்றி சில கேள்விகள் கேட்டாய்;இன்று இயேசுவைப் பற்றி நாம் கற்றுக் கொள்ளலாம்." என பேதுரு கூறினார். வளரும் பிள்ளைகளாகிய நீங்கள், விரைவிலே கிறிஸ்தவர்களாக விரும்புவீர்கள். இயேசு நம் அனைவருக்காகவும் செய்த சகல காரியங்களையும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

தேவன் உலகத்தைப் படைக்கும் போது அவரோடுகூட ஒருவர் இருந்ததாக யோவான் 1:1-3 வசனங்களில் வேதாகமம் கூறுகிறது. அவர் "வார்த்தை" என்றழைக்கப்பட்டார். நாம் அங்கு படிக்கிறோம் : "ஆதியிலே வார்த்தை இருந்து, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்து, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று;

உண்டான தொன்றும் அவராலே யல்லாமல் உண்டாகவில்லை.''

தேவனைப் பற்றி சில காரியங்கள் நமக்குப் புரிந்து கொள்ள கடினமாக இருக்கின்றன. ஏனெனில் நமது மனித மூளை அவ்வளவு பெரிது அல்ல. ஆனால், அம்மா, நான், நீ எல்லாரும் கூடி இருந்த போதிலும் ஒவ்வொருவரும் தனிப்பட்டவர்களாக இருப்பதுபோல, தேவனோடு இருந்த "வார்த்தை"யே தேவனாக இருந்தார் என வேதாகமம் கூறுகிறது.

"தேவனோடு அவர் இருந்தால் ரெம்ப நன்றாக இருந்திருக்கும். அவர் ஏன் இந்த உலகத்திற்கு வந்தார்?'' என்று யாக்கோபு கேட்டான்.

"பாவத்தைப் போக்க அவர் வாழ்ந்தார். நினைவிருக்கிறதா? ஏதேன் தோட்டத்திலே, ஆதாமும் ஏவாளும் தேவனுக்குக் கீழ்ப்படியாமல் போய் பாவத்தை உலகத்திற்குக்கொண்டு வந்தனர். தேவனுக்கும் மக்களுக்கும் இடையே பாவம் ஒரு பெரிய பிரிவுச் சுவரை உண்டாக்கி விட்டது. தேவன் தாம் உண்டாக்கின மக்களை நேசித்தார். எனவே, பாவத்தை அழித்து, மீண்டும் நம்மை அவருடைய பிள்ளைகளாக்க ஒரு வழியை ஏற்படுத்தினார். உலகத்தில் தேவனுடைய குமாரனாகவும், மனித குமாரனாகவும் பிறந்த அந்த 'வார்த்தை'யின்' மூலமாக அந்த வழிபிறந்தது. அவர் இயேசு என அழைக்கப்பட்டார்.

எபிரேயர் 1:1-3-ம் வசனங்களில், தமது மகிமையின் வெளிச்சமும், அவரின் அச்சான சாயலுமான குமாரன் மூலமாக நம்மிடம் தேவன் பேசுவதைப் படிக்க முடியும். அதாவது நீ என்னைப் போல் இருக்கிற மாதிரி அவரும் தேவனுடைய இயல்பாக இருக்கிறார் என்றுதான் அதற்குப் பொருள். ஒரு மனிதனைப் போல் இயேசு காணப்பட்டாலும் அவர் மிக மேலானவராக இருந்தார். ஏனென்றால், அவருடைய சொந்த மரணத்தின் மூலம் மரணத்தின் வல்லமையை அழிக்கவும், நமது வாழ்வின் கறைகளை அகற்றவும், மாம்சமும் இரத்தமும் கொண்ட மனித உடம்பில் வந்த தேவனாக அவர் இருந்தார். (எபி. 2:10-14)

"எங்களுடைய ஞாயிறு வேதாகம வகுப்புகளில் இயேசுவைப் பற்றி நாங்கள் படித்துக் கொண்டிருக்கிறோம்'' என்றாள் அசீமா. இயேசு தேவனிடமிருந்து வந்தவர் என்றும் அவர் விசேஷித்த போதகராக இருந்தார் என்றும் எல்லா மதங்களும் கூறுவதை எங்கள் ஆசிரியை சொன்னார். ஆனால் அவர் தேவனிடமிருந்து பிறந்த அவருடைய ஒரே குமாரன் என்பதையும், தேவனுக்காக பேச அனுப்பப்பட்ட ஒரே ஒருவர் என்பதையும்

அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை."

"அது சரிதான்" என்று ஒப்புக் கொண்டார் பேதுரு. இன்று தேவன் அவருடைய குமாரன் வழியாக நம்மிடம் பேசுகிறார் என எபிரேயரில் நாம் வாசித்த வசனம் கூறுகிறது. பல ஆண்டுக ளுக்கு முன் மரித்துப் போன மோசே, எலியா ஆகியோருடன், மலையின் மேல் ஆவிரூபத்திலே இயேசுவை அவரைப் பின்பற்றி யவர்கள் ஒருமுறை கண்டபோது, ஒன்று இயேசுவுக்கும், மற் றொன்று மோசேக்கும், அடுத்து எலியாவுக்குமாக மூன்று கூடா ரங்களை அங்கே கட்டலாம் என அவருடைய சீடர்கள் கூறினார் கள். ஆனால், தேவன் தாமே பரலோகத்திலிருந்து பேசினார் : "இவர் என் நேச குமாரன்; இவரில் நான் மிகப்பிரியமாய் இருக்கிறேன். அவருக்குச் செவி கொடுங்கள்."

"நமது பாவங்களை நீக்க, நமது மத்தியில் இயேசு மரித்தப டியால், நாம் என்ன செய்ய வேண்டுமென்று சொல்லக்கூடிய உரிமை அவர் ஒருவருக்கு மட்டுமே உண்டு. எனவேதான் அவரை எப்படிப் பின்பற்ற வேண்டும் என அறிந்து கொள்ள, வேதாகமத்தைக் கற்றுக் கொள்ள வேண்டியது மிக அவசியம் ஆகும். இயேசு தம்முடைய குமாரன் எனதேவன் நமக்குக் கற்பிக்கிறார். இயேசு வழியாக நாம் தேவனுடைய பிள்ளை களாக ஆக முடியும். இதைப் போல் முக்கியத்துவம் வாய்ந்த வேறு எந்த ஒரு காரியமும் இவ்வு லகில் கிடையாது."

B.B. Choate
RR Nayagam

## "பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமா?"

இயேசு ஒரு பிள்ளையைத் தம்மிடத்தில் அழைத்து,, அதை அவர்கள் நடுவே நிறுத்தி நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்களென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

மத். 18 : 2, 3

# புதிய ஏற்பாட்டு ஆராதனை (6)

## தொழுகையின் நாள்

புதிய ஏற்பாட்டில் ஆராதனையின் அவசியத்தைப்பற்றி நமக்குக் கூறப்பட்டிருப்பது மட்டுமல்லாமல் எந்த நாளில் கர்த்தருடைய பிள்ளைகள் கூடி அவரைத் தொழுது கொள்ளவேண்டும் என அவர் எதிர்பார்க்கிறார் என்றும் நமக்குச் சொல்லப்பட்டுள்ளது. இந்த நாள் எது?

ஆராதனை செய்ய மனிதனைக் கட்டுப்படுத்தும் நாள் இன்னும் சனிக்கிழமைதான் என போதிக்கிறவர்கள் இருக்கின்றனர். இது உண்மையாக இருக்கக்கூடுமா? நியாயப்பிரமாணம் அகற்றப்பட்டிருந் தால் இது உண்மையல்ல. (2 கொரி 3 : கொலோ 2 : 14, எபிரே 9:16-71, எபிரே 10 : 9) ஆகிய வசனங்களின்படி அது தவறு என்றபோதிலும் பவுல் யூதர்களை சனிக்கிழமை சந்தித்தாக வாக்குவாதம் செய்யப்படுகிறது. அது உண்மையாக இருக்கலாம். ஆனால் அவர் ஆராதனைக்காக அன்று அவர்களைச் சந்தித்ததாக எங்குமே கூறப்படவில்லை. மாறாக தேவனுடைய கற்பனைகளை உபதேசிக்கும் ஒரு வாய்ப்பாக அவர்களை அவன் சந்தித்தான்.

சனிக்கிழமை ஆராதனை நாளாக இல்லையெனில் வேறு எந்த நாள்? புதிய ஏற்பாட்டின் பக்கங்களைத் திருப்பினால் இக்கேள்விக்கு விடையளிக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட பல சுவிசேஷக் குறிப்புகளைக் காணலாம். முதலில் ஆராதிக்கக்கூடி வந்திருந்த புதிய ஏற்பாட்டுக் கிறிஸ்தவர்களின் ஒரு குழுவை உதாரணமாக எடுத்துக்கொண்டால் அவர்கள் எந்த நாளில் கூடினார்கள் என்பதைப் பார்க்கலாம். துரோவா பட்டணத்தின் வழியாக பவுல் பயணம் செய்தபோது அங்குள்ள பிராந்திய கிறிஸ்தவர்களுடன் ஆராதிக்கும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளவேண்டி அங்கு சில தினங்கள் தங்கியிருந்ததாக வசனம் கூறுகிறது' அந்த வசனத்தையே இங்கு படித்துப் பார்ப்போம். "வாரத்தின் முதல் நாளிலே அப்பம் பிட்கும்படி சீடர்கள் கூடிய வந்திருக்கையில் பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து அவர்களுடனே சம்பாஷித்து நடுராத்திரிமட்டும் பிரசங்கித்தான்" (அப் 20:7) அவன் துரோவாவில் ஏழு நாட்கள் தங்கியிருந்ததாக (அப் 20 : 6) வசனம் கூறுவதைக் கவனியுங்கள். அதற்கு பொருள்

சனிக்கிழமையும் பவுல் அங்குதான் இருந்தான் என்பது தான். ஆனால் அந்த நாளில் கிறிஸ்தவர்களை அவர் சந்தித்ததை வசனம் கூறவில்லை. மாறாக வாரத்தின் முதல் நாளிலே அல்லது சனிக்கிழமைக்குப் பின் வந்த முதல் நாளிலே சந்தித்ததாகக் கூறுகிறது. இப்போது இதில் முக்கியத்துவம் என்னவாக இருந்திருக்கும்? இதில் என்ன முக்கியத்துவம் என்றால் சனிக்கிழமை ஆராதிக்க வேண்டி அவன் அங்கு தங்கவில்லை. மாறாக ஆதராதனைக்குக் கர்த்தர் நியமித்த நாளாகிய வாரத்தில் முதல் நாளிலே ஆராதிப்பதற்காக அங்கு தங்கினான்.

வாரத்தின் முதல் நாள்தான் எது? சரி, நியாயப் பிரமாணத்தின் கீழ் வாரத்தின் ஏழாவது நாளாக சனிக்கிழமை இருந்தது. அதாவது சனிக்கிழமை வாரத்தின் ஏழாவது நாளாக இருந்தால் ஒவ்வொரு வாரத்திலும் ஏழு நாட்கள் மட்டுமே இருப்பதால் சனிக்கிழமையைத் தொடர்ந்து வரும் நாள் வாரத்தின் முதல் நாளாகும், அதற்கு அடுத்த நாள் வாரத்தின் இரண்டாவது நாளும். அதேபோல மூன்று நான்கு என்று தொடரும், இந்த நவீன காலத்தில் அதை ஞாயிற்றுக்கிழமை என்கிறோம், ஞாயிற்றுக்கிழமை வாரத்தின் முதல் நாளாகக் குறிப்பிடப்படுகிறது.

ஏன் வாரத்தின் முதல் நாள்? மோசேயின் நியாயப்பிரமாணத்தின் கீழ் ஆராதனையின் நாள் சனிக்கிழமை அல்லது வாரத்தின் கடைசி நாளாக இருந்தது. கிறிஸ்துவின் சட்டப்படி ஆராதனை நாள் ஞாயிறு அல்லது வாரத்தின் முதல் நாள், அதாவது இனி கர்த்தருக்கு கடைசி இடம் இல்லை. மாறாக அவருக்கு முதலிடம் அளிக்கப்பட்டு முதலாதாக வந்துவிடுகிறார். (மத் 6 : 33)

ஆனால் தொடர்ந்து அடுத்த காரியமாக, அவரவர் தகுதிக்கு ஏற்றாற்போலக் கொடுக்க வேண்டுமென்பதைப்பற்றி கொரிந்து சகோதரர்களுக்கு அப்போஸ்தலர் பவுல் கற்பிப்பதை நாம் கவனிக்கவேண்டும் : "பரிசுத்தவான்களுக்காக சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்குப் பண்ணின திட்டத்தின்படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள்தோறும் தன் தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக்கடவன்" (1 கொரி 16 : 1 - 2)

ஆனால் அவரவர் வரவுக்குத் தக்கதாக எதையாவது கொடுக்கும் நாளாக இந்த நாள் ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டது? ஏனெனில் இதுதான் ஆராதனை நாள்; அன்று அவர்கள் அனைவரும் கூடி வருவார்கள்

என்பதால்; அதுவே தங்கள் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் கொடுத்திட மிகவும் பொருத்தமான நாளாக இருக்கும் என்பதால் அந்தநாள் தேர்வு செய்யப்பட்டது. இப்போது சனிக்கிழமை ஆராதனை நாளாக இருந்திருப்பின் நிச்சயமாக அவர்களுடைய காணிக்கைகளைக் கொடுக்க மீண்டும் அடுத்த நாளே அவர்கள் கூடி வர பவுல் அழைத்திருக்கமாட்டான். மாறாக சனிக்கிழமைதான் ஆராதனை நாள் என இன்று போதிக்கக்கூடியவர்கள், கொடுத்தல் என்னும் தேவனுடைய கட்டளைக்குக் கீழ்ப்படிய அடுத்த நாளாகிய ஞாயிற்றுக்கிழமை மீண்டும் கூடுகிறார்களா? அவ்வாறு இல்லை என்றால் ஏன் இல்லை?

பின்னர் வாரத்தின் முதல் நாளே கர்த்தருடைய நாள் என்பதாக யோவான் கூறினார். கர்த்தருடை நாளில் ஆவிக்குள்ளானேன். (வெளி 1 : 10) ஒரு வகையில் சொல்லப்போனால், எல்லா நாட்களுமே கர்த்தருடைய நாட்கள் தான் என்பது உண்மையே; ஆனாலும் யோவான் இந்த நாளைப்பற்றி ஒரு தனிப்பட்ட முறையில் சொல்லியிருக்க வேண்டும் : கர்த்தரின் நாள் என்பது ஆராதனை நாள் அல்லது வாரத்தின் முதல் நாளைத்தான் குறிக்கும். இல்லாவிடில் அதைக் கர்த்தரின் நாள் என அவர் ஏன் அழைக்க வேண்டும்?

ஆனால், வாரத்தின் முதல் நாள் ஏன் அவ்வளவு முக்கியத்துவம் பெற்றது? ஏற்கனவே குறிப்பிட்டதுபோல சட்டங்கள் மாறி, இப்போது கர்த்தர் முதலிடம் வகிப்பதைக் காட்டவும், இன்னும் அந்நாளின் முக்கியத்திற்கு வேறு பல காரணங்கள் இருக்கின்றன.

## 1. கிறிஸ்து வாரத்தின் முதல் நாள் உயிர்த்தெழுந்தார்.

கர்த்தர் உயிர்த்தெழுந்த நாள் காலையில் "ஓய்வு நாள் முடிந்து, வாரத்தின் முதலாம் நாள் விடிந்து வருகையில் மகதலேனா மரியாளும் மற்ற மரியாளும் கல்லறையைப் பார்க்க வந்தார்கள்" என வசனம் கூறுகிறது (மத் 28 : 1) அதே நாளில் சிறிது நேரம் சென்ற பின் "வாரத்தின் முதல் நாளாகிய அன்றையத்தினம் சாயங்கால வேளையிலே, சீடர்கள் கூடியிருந்த இடத்தில், யூதர்களுக்குப் பயந்ததினால் கதவுகள் பூட்டியிருக்கையில், இயேசு வந்து நடுவே நின்று: உங்களுக்குச் சமாதானம் என்றார் (யோவான் 20 : 19) என்பதாக நாம் படிக்கிறோம்.

## 2. இயேசு மீண்டும் தமது சீடர்களுக்கு வாரத்தின் முதல் நாளிலே தரிசனமானார் :

இயேசு, வாரத்தின் முதல் நாளிலே கல்லறையிலிருந்து உயிர்த்து எழுந்து வந்தபின், அதே நாளில் தமது சீடர்களுக்கு தரிசனமானது மட்டுமல்ல ஆனால் குறிப்பிடத்தக்க சுவையான செய்தி என்னவென்றால், இப்போது மீண்டுமாக ஒரு முறை வாரத்தின் முதல் நாளில் அவர்களுக்குத் தரிசனமானர். மறுபடியும் எட்டு நாளைக்குப் பின்பு அவருடைய சீடர்கள் வீட்டுக்குள்ளே இருந்தார்கள் தோமாவும் அவர்களுடனே கூட இருந்தான், கதவுகள் பூட்டப்பட்டிருந்தது, அப்பொழுது இயேசு வந்து நடுவே நின்று உங்களுக்குச் சமாதானம் என்றார்" (யோவான் 20 : 26) என வசனம் கூறுகிறது. வாரத்தின் முதல் நாளிலே இயேசு தமது சீடர்களுக்குத் தரிசனமாகி பின்னர் எட்டு தினங்கள் சென்று மீண்டும் தரிசனமானார். இரண்டாவது சந்திப்பு எந்த நாளில் நடந்திருக்க வேண்டும்? சந்தேகமின்றி வாரத்தின் முதல் நாளில்தான். சுவிசேஷம் இதை நமது கவனத்திற்கு மீண்டும் மீண்டுமாக கொண்டு வர வேண்டிய காரணம் என்ன? ஏனென்றால் கிறிஸ்துவின் சட்டத்தின் கீழ் அது மிகவும் முக்கியமான ஒரு நாளாக இருப்பதால் தான். அது ஆராதனையின் நாள் ஆகிறது.

## 3. வாரத்தின் முதல் நாளே சபையின் ஆரம்ப நாள் (அப் 2)

பஸ்கா பண்டிகைக்கும் கர்த்தர் உயிர்த்தெழும் நாளுக்கும் இரு நாட்களுக்கு முன் பெந்தெகொஸ்தே நாள் வந்தது. எனவே கர்த்தர் வாரத்தின் முதல் நாள் உயிர்த்தால், பின்னர் பெந்தெகோஸ்தே நாள் 50 நாட்களுக்குப் பின் வரும் போது பெந்தெகோஸ்தே நாள் எந்த நாளில் வந்திருக்கும்? வாரத்தின் முதல் நாள். ஆனால் பெந்தேகோஸ்தே நாள் ஏன் அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது? அது வாரத்தின் முதல் நாள் வந்ததாலும் இந்த நாளில்தானே கர்த்தரின் சபை நிறுவப்பட்டது என்பதாலும், இந்த நாள் முக்கியமானது. அது மட்டுமல்ல பல முக்கியமான காரியங்களை முதல் முதலாக இந்த நாளில் நடந்தன. இவை அனைத்தும் இந்த குறிப்பிட்ட நாளுக்கு அது முக்கியத்துவத்தை அளிப்பதாக இருக்கிறது. உதாரணமாக, பரிசுத்த ஆவியானவர் இந்த நாளில் தான் வந்தார் இந்த நாளில் தான் உண்மையில் முதல் நற்செய்தி பிரசங்கம் போதிக்கப்பட்டது. இந்த நாளில் தான் கீழ்ப்படிந்த முதல் ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டு சபையில் சேர்த்துக்

கொள்ளப்பட்டனர். எனவே இந்த நாளில் நடந்த இக்காரியங்களை அலட்சியப்படுத்தி விடமுடியாது.

நிச்சயமாக தமது மக்கள் கூடவும் ஆராதிக்கவும் வேண்டி கர்த்தர் வாரத்தின் முதல் நாளைத் தேர்ந்தெடுத்துள்ளார் என்பதை சந்தேகத்திற்கிடமின்றி இப்போது நாம் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருக்கிறோம். ஆதிக் கிறிஸ்தவர்கள் கூடி வந்த இந்த நாளின் உதாரணத்தோடு, பின் இதே நாளில் காணிக்கை கொடுக்க வேண்டி கூடிவரக் கட்டளை பெற்றுக் கொண்டபோது முன்பு இருந்திருக்கக்கூடிய எந்த சந்தேகத்தையும் இவை நிவர்த்தி செய்திருக்கும் என்பது நினைவிருக்கட்டும். ஆராதனையிலும் பிற எல்லா காரியங்களிலும் கர்த்தர்தாமே முதலிடம் பெறுகிறார். எனவே தான் கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் கூடி ஆராதிக்கவும் அவர்களுக்காக மரித்து, வாரத்தின் முதல் நாளிலே உயிர்த்த அவரை நினைக்கவும் வேண்டும்.

J.C. சோட்

## -: வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு :-

“திருமறை ஆசான்” வாசகர்கள் பட்டியலை மாவட்ட வாரியாக ஒழுங்கு படுத்தும் பணி நடந்து கொண் டுள்ளது. தொடர்ந்து எங்கள் மாத இதழைப் படித்துப் பயன் பெற விரும்புவோர், ஓர் அஞ்சல் அட்டையில் (Post-Card) தெளிவான முகவரியுடன் உங்கள் விருப்பத்தை எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

பதில் வரும் வாசகர்களுக்கு மட்டுமே வரும் புத்தாண்டிலிருந்து “திருமறை ஆசான்” அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஆசிரியர்

# புதிய ஏற்பாட்டு ஆராதனை (7)

## தொழுகையின் மாதிரி

இன்றைய மத உலகில் பல வகையான தொழுகை முறைகள் இருப்பதை நாம் பார்க்கிறோம். கத்தோலிக்கர்கள் தங்களுக்கே உரித்தான தனி வழியில் தொழுகின்றனர். புராட்டஸ்டண்ட் சபைகள் வெவ்வேறு வகையான தொழுகை முறைகளைப் பின்பற்றுகின்றன. அதாவது, வித்தியாசப்பட்ட தொழுகை முறைகள் அனைத்தையும் நீங்கள் காண விரும்பினால், வாரக்கணக்கில் பல இடங்களுக்கும் சுற்றி வரலாம். ஏன் இந்த நிலை? இப்படி இருக்கவேண்டுமென்று கர்த்தர் விரும்பினாரா?

ஒரே ஒரு சபைதான் இருக்கிறது; அது கர்த்தருக்கே சொந்தமானது என்று வேதாகமம் கற்பிக்கிறது. (எபே. 4 : 4 : மத். 16 : 18). சபையின் மாதிரி புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது. இது உண்மையாக இருக்கும் வேளையில், நாம் தொழுது கொள்ள கட்டளையிடப்பட்ட கர்த்தருடைய சபையாக அதுவே இருக்கும்போது, தொழுகையும் ஒரே மாதிரியாகத்தான் இருக்க வேண்டும்.

தம்மை மக்கள் இன்று எவ்வாறு தொழுது கொள்ள வேண்டுமென கர்த்தர் விரும்புகிறார் என்பதை அறிய நாம் புதிய ஏற்பாட்டுக்குத்தான் செல்லவேண்டும். இதை அறிய வேறு வழி எதுவும் இல்லை. ஆராதனையில் நாம் என்ன செய்யவேண்டும் என்பதை அங்கேதான் நாம் தெளிவாக கண்டுகொள்ள முடிகிறது. கீழ்கண்டவற்றை அது வெளியிடுகிறது.

### 1. தேவன் ஒருவரே தொழுது கொள்ளத் தக்கவர்

" . . . . உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக . . . " என பிசாசால் சோதிக்கப் படுகையில் கிறிஸ்து கூறினார். (மத்தேயு 4 : 10).

### 2. வாரத்தில் முதல்நாள்தான் ஆராதனை நாளாக இருக்கவேண்டும்

வாரத்தின் முதல் நாள்தோறும் சீடர்கள் தங்கள் வரவுக்குத்தக்கதாக சேர்த்து வைத்து, கூடிவரக் கேட்டுக் கொள்ளப்பட்டனர் : "நான் வந்திருக்கும்போது பணஞ் சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன்

வாரத்தின் முதல் நாள்தோறும் தன்தன் வரவுக்குத் தக்கதாக எதை யாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன்." (1கொரி. 16 : 2).

### 3. கிறிஸ்தவர்கள் கர்த்தரை தொழுதுகொள்ள வேண்டும்

இதற்கு நமக்கு மூன்று காரணங்கள் உள்ளன : "அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்." (அப். 2 : 42). "வாரத்தில் முதல் நாளிலே, அப்பம் பிட்கும்படி சீடர்கள் கூடி வந்திருக்கையில், பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டு மென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து, நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்." (அப். 20 : 7).

### 4. நாம் எவ்வாறு தொழுதுகொள்ள வேண்டுமென்று நமக்கு கூறப்பட்டுள்ளது :

கிறிஸ்து கூறும்போது, "உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிற வர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள் ளுங்காலம் வரும். அது இப்பொழுதே வந்திருக்கிறது; தம்மைத் தொழுது கொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார். தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும் என்றார்." (யோவான் 4:23, 24).

### 5. ஆராதனையின் ஐந்து செயல்களும் தெளிவாக நியமிக்கப்பட்டுள்ளன.

அவைகள் : வேதாகமப் போதனை (2 தீமோத்தேயு 2 : 15); ஜெபம் (அப். 2 : 42); பாடல் (எபே 5 :19 ) கர்த்தரின் பந்தி (மத்தேயு 26 : 26 -28); கொடுத்தல் (2 கொரி. 9 : 6, 7). புதிய ஏற்பாட்டில் நாம் காணும் ஆராதனை முறைகள் இவை மட்டுமே. எனவே, நாம் இவைகளை மட்டுமே ஆராதனையில் கடைப்பிடிப்பதோடு நிறுத்திக் கொள்ள வேண்டும்.

### 6. ஆராதனையில் கூடி வருவதில் தவறாதிருக்க நாம் அறிவுறுத்தப்படுகிறோம் :

"சபை கூடிவருதலைச் சிலர் விட்டு விடுகிறது போல நாமும் விட்டு விடாமல், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லக்கடவோம்; நாளானது சமீபித்து வருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய் புத்தி சொல்ல வேண்டும்," என எபிரேய எழுத்தர் கூறினார்.

## 7. ஆராதனை முறை எளியதும், தேவையானவை மட்டுமே உள்ளன

ஆராதனையில் பங்கு பெறுவது யாருக்கும் கடினமானதல்ல. அவசியமற்ற சடங்குகள் எதுவும் இல்லை. மாறாக, சகலரும் கலந்து கொள்ள எளிய முறைகளே உள்ளன. சகலரும் அழைக்கப்படுகின்றனர்.

## 7. ஆராதனை நிகழ்ச்சி முழுவதுமாக கர்த்தருடைய வார்த்தைக்கு ஏற்ப நடைபெறுகிறது :

தேவனுடைய வாக்கியங்களின்படி மட்டுமே நாம் பேசுகிறோம். (1 பேதுரு 4 : 11)."கர்த்தர் இவ்வாறாக கூறுகிறார்" என்பதற்கு மாறாக எதுவும் செய்யப்படுவதில்லை.

புதிய ஏற்பாடு ஆராதனை மாதிரியைப் பின்பற்றுவதில் கிறிஸ்துவின் சபை சிறப்புத்தன்மை பெற்றது. எனவே மற்ற குழுக்களில் உள்ள சில காரியங்கள் எங்கள் ஆராதனையில் இடம் பெறுவதில்லை. உதாரணமாக, கீழ்க்கண்டவைகள் எங்கள் ஆராதனையில் கிடையாது. :

1. நாங்கள் இசைக்கருவிகளை ஆராதனையில் பயன்படுத்துவதில்லை. தேவனைப் புகழ்ந்து பாடவேண்டுமென புதிய ஏற்பாடு தெளிவாகக் கற்பிக்கிறது."சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக்கீர்த்தனம் பண்ணி"என பவுல் கூறுகிறார். (எபே. 5 : 19) பாடல் பற்றிய பாடத்தில் இது பற்றி மேலும் கூறுவோம்.
2. கர்த்தரின் பந்தியை நாங்கள் இரகசியமாக அனுசரிப்பதில்லை. மாறாக, "எந்த மனிதனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக்கடவன்" என பவுல் கொரிந்தியருக்கு (1 கொரி. 11 : 28) எழுதியிருப்பதால், கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ள தடை விதிப்பதில்லை.
3. தசமபாகம் என்பதை நாங்கள் பின்பற்றுவதில்லை. அவரவர், தங்கள் வருமானத்திற்கு ஏற்றவாறு கொடுக்க வேண்டும் என பவுல் கிறிஸ்தவர்களுக்கு எழுதினார் (1 கொரி. 16 : 2).
4. கர்த்தரின் நாளைத்தவிர மற்ற நாட்களில் காணிக்கை வாங்குவதில்லை. வாரத்தின் முதல் நாளாக இருப்பினும் இல்லாவிட்டாலும், தாங்கள் கூடும் நேரங்களில் எல்லாம் பல குழுக்கள் காணிக்கை வசூலிக்கின்றனர். ஆனால் கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாள் கொடுக்கக் கட்டளையிடப்பட்டுள்ளனர். (1 கொரி. 16 : 2)

5. ஆராதனையில் பாடல்களை பாட தனிப்பட்ட ஒரு பாடகர் குழு எங்களிடம் இல்லை. ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனும் பாடவேண்டுமென சுவிசேஷம் கற்பிக்கிறது. எனவே, சபை உறுப்பினர்கள் அனைவரும் சேர்ந்து பாடுகிறோம். பவுல் கூறியது போல, "என்னத்தினாலெனில், நான் அந்நி பாஷையில் விண்ணப்பம் பண்ணினால், என் ஆவி விண்ணப்பம் பண்ணுமேயன்றி, என் கருத்து பயனற்றதாக இருக்கும். இப்படியிருக்க, செய்ய வேண்டுவதென்ன? நான் ஆவியோடும் விண்ணப்பம் பண்ணுவேன், கருத்தோடும் விண்ணப்பம் பண்ணுவேன்; நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன். (1 கொரி. 14 : 14, 15).

6. ஈஸ்டர், கிறிஸ்மஸ் போன்ற சிறப்பு ஆராதனை நாட்கள் எங்களுக்குக் கிடையாது."நாட்களையும், மாதங்களையும், காலங்களையும் வருடங்களையும் பார்க்கிறீர்களே. நான் உங்களுக்காகப் பிரயாசப்பட்டது வீணாய்ப் போயிற்றோ என்று உங்களைக் குறித்துப் பயந்திருக்கிறேன்" என பவுல் தமது கலாத்திய சகோதரர்களை எச்சரித்தார். கலாத்தியர் 4: 10, 11.

7. நாங்கள் கர்த்தரின் பந்தியில் தினந்தோறும், அல்லது மாதத்திற்கு ஒரு முறை, அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அல்லது வருடத்திற்கு ஒரு முறை கலந்து கொள்ளுவதில்லை. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை அல்லது வாரத்தின் முதல்நாளில் நாங்கள் கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளுகிறோம். ஆதி கிறிஸ்தவர்கள் இவ்வாறு செய்தார்கள் என நாம் படிக்கிறோம். (அப். 20 : 7) வாரத்தின் எந்த முதல் நாளில்! எது என்று கூற யாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது? ஒவ்வொரு வாரத்திலும் ஒரு முதல் நாள் உண்டு. அந்த நாளில் தான் கர்த்தரின்பந்தியில் கலந்து கொள்ளக்கூடுகிறோம். நாம் கொடுக்கவும், கற்றுக் கொள்ளவும் கூடிவரும்போது, கர்த்தரின் பந்தியில் கலந்து கொள்ளவும் கூடி வருகிறோம்.

8. கர்த்தரை தொழுதுகொள்ள நாங்கள் எவ்விதமான நடைமுறைகளையோ, பாரம்பரியங்களையோ, சடங்குகளையோ, செய்வதில்லை. "உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அனுசரித்து வந்த வீணான நடத்தையினின்று அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல்" என பேதுரு கூறினார். (1 பேதுரு 1 : 18). அத்தோடு பவுல், "லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனிதர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலக வழிபாடுகளையும்

பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப் பற்றினதல்ல," என எச்சரித்தார் (கொலோ. 2 : 8).

9. மனிதச் சட்டங்களையும் கொள்கைகளையும் நாங்கள் பின்பற்றுவதில்லை. அப்போஸ்தலர் எழுதினார்: "நீங்கள் கிறிஸ்துவுடனே கூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்த துண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள் போல, மனிதனுடைய கற்பனைகளின்படியும் போதனைகளின் படியும் நடந்து : தொடாதே. ருசி பாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே." (கொலே. 2 : 20 - 22).

10. பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணத்தை நாங்கள் ஆராதனையில் பின்பற்றுவதில்லை. பலர் சனிக்கிழமை ஆராதனை, தசமபாகம் கொடுத்தல், பாடல்களில் இசைக் கருவிகளை பயன்படுத்துதல் இன்னும் இதுபோன்ற நியாயப் பிரமாணச் சட்டங்களைப் பின்பற்றுகின்றனர். ஆனால் இது சுவி சேஷத்தின் அப்பகுதியை தவறாகப் பயன்படுத்தும் வேலையாகும். நியாயப்பிரமாணம் இன்று நம்மைக் கட்டுப்படுத்துவதில்லை. (2 கொரி. 3: எபி. 10:9: யோவான்1: 17).

எனவே, நாம் புதிய ஏற்பாட்டில் எதையும் சேர்க்காமல், அல்லது எடுத்துப் போடாமல், அல்லது மாற்றாமல் அதை அப்படியே கடைபிடிக்க வேண்டும். (வெளி. 22 : 18, 19; கலா. 1 : 7 -9). எந்த நற்கிரியையும் செய்ய மனிதனை அது முற்றிலும் தகுதியுள்ளவனாக் குகிறது. (2 தீமோ. 3:16,17). ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவும் அதன் பக்கங்களில் அடங்கியுள்ளன. (2 பேதுரு 1 : 3).

இந்த வகை ஆராதனைக்கு மக்கள் அனைவரும் திரும்புவதுடன், மதத்தின் பெயரால் அவர்கள் செயல், சொல் ஆகிய சகல காரியங்களிலும் புதிய ஏற்பாட்டிற்குத் திரும்பினால், நாம் மத ஒற்றுமையுடன் இருக்க முடியும். நிச்சயமாக, என்னை ஒருவிதமாக ஆராதனை செய்யவும், உங்களை வேறு ஒருமாதிரியாக ஆராதனை செய்யவும் கர்த்தர் கட்டளையிடவில்லை மாறாக, நாம் அனைவரும் ஒரே மாதிரியாக தம்மை ஆராதிப்பதையே அவர் விரும்புகிறார். அவர் நமக்கு அளித்திருக்கிற ஒரே உண்மை மாதிரியை நாம் பின்பற்றும்போது, நாம் அனைவரும் ஒரே மாதிரியாக ஆராதிப்போம்.

# “இன்று உங்களை பிரதிஷ்டை பண்ணுங்கள்” (யாத் 32 : 29)

இஸ்ரவேலர் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தேவனைக் கூப்பிட்ட போது தேவன் அவர்களுக்கு செவிகொடுத்து அவர்களை விடுதலையாக்கினார். மோசே அவர்களை எகிப்திலிருந்து அழைத்து வந்து வனாந்திர மார்க்கமாக வழிநடத்திச் சென்றார். வனாந்திர வாழ்க்கையில் தேவன் அவர்களுடன் இருந்து அவர்களை அற்புதமாக காப்பாற்றி அவர்களை போஷித்து எல்லா சரீர தேவைகளையும் கொடுத்தார். இஸ்ரவேலரும் வனாந்திர வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் ஆரம்பித்தனர். தேவன் அவர்களுக்குக் பத்துக் கட்டளையைக் கொடுப்பதற்காக மோசேயை அழைத்தார். சீனாய் மலையில் நாற்பது நாட்கள் மோசே தேவனோடே இருந்தார். அங்கே பத்துக்கட்டளையை தேவன் எழுதி கொடுத்தார் மோசே அதை வாங்கிக் கொண்டு வர தாமதமானபோது இஸ்ரவேலர் பொறுமையை விட்டுவிட்டனர்! மாறாக கன்றுகுட்டி சுரூபத்தை பொன்னினால் உண்டாக்கி அதை நமஸ்கரித்து இதுதான் எங்களை எகிப்தியிருந்து கொண்டு வந்ததென்று பண்டிகை கொண்டாடித் தங்களை முழுவதுமாகக் கெடுத்துக் கொண்டார்கள்! (யாத் 32 : 1 - 7).

விக்கிரக ஆராதனையினால் பரிசுத்தத்திற்கு பங்கம் ஏற்பட்டுவிட்டது. இஸ்ரவேலர் அசுத்தமானார்கள்! அவர்களின் எல்லா அவயவங்களும் அசுத்தமாயின! மோசேயின் ஜெபமும், அவர் இஸ்ரவேலருக்காக பரிந்து பேசினதற்காகவும் தேவன் அவர்களை மீண்டும் பரிசுத்த வாழ்விற்கு அழைத்து" இன்று உங்களை கர்த்தருக்கு பிரதிஷ்டை பண்ணுங்கள் என்று கூறினார்.

இந்த புத்தாண்டிலே நாமும் பரிசுத்த வாழ்வை பெற வேண்டும் நம்மையும் பிரதிஷ்டை பண்ண வேண்டும். கடந்த நாட்களிலே நாமும் இஸ்ரவேலரைப் போல விக்கிரக ஆராதனையும், வீணான ஆராதனையும் செய்து வந்து கர்த்தருக்கு விரோதிகளாக வாழ்ந்தோம். தேவனோ நம்மை பரிசுத்தம் பண்ணும்படி, பிரதிஷ்டை பண்ணும்படி அழைக்கிறார்! சுவிசேஷத்தினாலே நம்மை இன்று அழைக்கிறார் (2 தெச 2 : 14) சுவிசேஷம் என்பது நற்செய்தியாகும் நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு அழைக்கும் செய்தி நற்செய்திதானே!

கிறிஸ்து வேதவாக்கியங்களின்படி நமது பாவங்களுக்காக மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார் என்பதே நற்செய்தியின் பொருளாகும். (1. கொரி 15 : 3, 4) இந்த உண்மைச் செய்தியைக் கேட்டு, விசுவாசித்து மனந்திரும்பி, அறிக்கையிட்டு, ஞானஸ்நானத்திற்கு உடனே ஆயிரக்கணக்கான யூதர்களும், கிரேக்கர்களும், மற்றவர்களும் கீழ்படிந்து ரட்சிப்பைப் பெற்றனர் என்று அப்போஸ்தலர் நடபடிகளின் புஸ்தகத்தில் வரலாறு கூறுகின்றன.

சுவிசேஷத்திற்கு கீழ்படிந்து பரிசுத்த வாழ்வை தேவன் யூதர்களுக்கு மட்டும் கொடுக்காமல் உலகமெங்கும் உள்ள எல்லா ஜாதிகளும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பமும், கட்டளையுமாகும். (மாற்கு 16: 15, 16, லூக்கா 24:47, மத் 28 :18 -20) ஆனால் நாமோ தேவனுடைய விருப்பத்திற்கு மாறாக நடந்து வந்தோம்! நாம் கறைப்பட்டுப்போனோம்!!

1. **இருதயம் :-** நம்மை இயங்க வைத்து ஆளுகின்ற இந்த இருதயம் தேவனுக்கு விரோதமாக சிந்தித்து பாவ கறைப்பட்டு போயிற்று (மாற்கு 7 :21, 22)

2. **சரீரம் :-** தேவனால் நமக்கு கிடைத்த இந்த சரீரத்தை பாவத்திற்கு ஒப்புக் கொடுத்து சரீர இச்சைகளின் படி செய்ததால் சரீரம் கெட்டுப் போயிற்று. (ரோமர் 8 : 12)

3. **கண்கள் :-** நமது சரீரத்திற்கே ஒளியாக இருக்கவேண்டிய கண்களை பாவ இச்சைகளைப் பார்க்கும்படியாகவும், கண்களின் இச்சையை நிறைவேற்றும்படியாகவும் செய்து ஆவிக்குரிய மனிதனை குருடனாக்கிவிட்டோம்! (மத் 5 :28: 2 கொரி 4 :4)

4. **வாய் : -** இயேசு கிறிஸ்துவை அறிக்கையிடாமல் வீணான வார்த்தைப் பேசி நமது வாயின் வார்த்தைகளாலே கெட்டுப் போனோம்! (மத் 10 : 32; மத் 12 : 36).

5. **செவிகள் : -** தேவனுடைய வார்த்தைகளைக் கேட்காமல் வீண் புரளிகளையும், மத போதனைகளையும் கேட்டு பொய்யை விசுவாசிக்கும்படியாக மாறிவிட்டோம்! (2 தீமோ 4 : 4)

6. **கைகள் :-** கர்த்தருக்கு காணிக்கையை வாரி வழங்காமல், வட்டி, லஞ்சம் என்று பண ஆசைகளுக்கு அடிமையானோம். பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேர். (1. தீமோ 6 :10).

7. **முழங்கால்கள் :-** தேவனுக்கு மகிமையாக அவருக்கு முன்பு முழங்காலில் நிற்காமல் விக்கிரகத்திற்கு முன்பு முழங்கால் போட்டு மண்டியிட்டு மடிந்துபோனோம் (பிலி 2 : 10, 11)

8. **பாதங்கள் :-** சுவிசேஷத்தை அறிவிக்கப் போவதற்கு பயன்படுத்தாமல், துன்மார்க்க வழியில் செல்ல ஒப்புக்கொடுத்து விட்டோம்! (சங் 1: 1. ரோமர் 10 : 15) இப்படியாக நாம் முழுவதுமாக பாவக்கறைகளால் நமது அவயவங்களும், இருதயமும், ஆன்மாவும் மரித்துக் கிடக்கிறது. இதிலிருந்து மீண்டும் புத்துயிர் அடையவே ஆண்டவர் இயேசு தமது ஜீவனை நமக்கு கொடுத்தார். இந்த புத்தாண்டிலே எல்லாம் புதியவைகளாக இருக்கும் போது நாமும் புதிதாவோம். கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்று புது மனிதனாக கிறிஸ்துவின் சபையில் கிறிஸ்துவால் சேர்க்கப்படுவோம். இதற்காக இன்று உங்களைக் கர்த்தருக்கு பிரதிஷ்டை பண்ணுங்கள்.

K. பாஸ்கர், கோவில்பட்டி.

# தூய நற்செய்திக்குக் கீழ்ப்படிவது மட்டுமே இரட்சிக்கக் கூடும்!

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தின் சரியான நிலையைக் கடைபிடிக்க மக்களுக்கு இன்று கடினமாக இருக்கிறது. ஆதிக் கிறிஸ்தவ மார்க்கம் பரிசுத்தமும் தெய்வீகத் தன்மையும் உடையதாக இருந்தது. நவீனம், ஊழல், போலித்தன்மை எதுவுமின்றி அது இருந்தது. புதிய ஏற்பாட்டின் ஆரம்ப நாட்களில், சீடர்களை யாராவது ஒரு போலி மதத்திற்குள் நடத்தி செல்வது என்பது மிகவும் கடினமான செயலாக இருந்திருக்கும். இயேசு தமது அப்போஸ்தலர்களிடம் சொல்லியிருந்தார் : "இன்னும் அநேக காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்கமாட்டீர்கள். சத்திய ஆவியாகிய அவர் வரும் போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ் சொல்லி, வரப் போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்." (யோவான் *16 : 12 - 13*).

ஆனால் சீக்கிரத்திலே, கிறிஸ்துவின் நேரடியான போதனைகளைக் கேட்ட மக்கள் அனைவரும் மரித்துப் போகவும், ஆவியால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்களும் தீர்க்க தரிசிகளும் பின்னர் மரித்துப் போகவும், கிறிஸ்து எதற்காக மரித்தாரோ அந்த மதத்தின் பூரணமான, இறுதியான வெளிப்படுத்துதலாக புதிய ஏற்பாடு மட்டுமே விட்டுச் செல்லப்பட்டிருந்தது. (2 தீமோ. 3 *: 16 - 17*).

அப்போஸ்தலர்களும் தீர்க்கதரிசிகளும் வாழ்ந்த காலத்தில், தேவன் அவருடைய ஆவியால் ஏவப்பட்டு வெளிப்படுத்திய ஒரே ஒரு கொள்கை மட்டுமே கற்றுக் கொடுக்கப்பட்டது, விசுவாசிக்கப் பட்டது. ஒரே உண்மை நற்செய்திக்கு விரோதமான எந்த ஒரு உபதேசமும், உண்மைக்கு மாறான போலி என உடனே தோலுரித்துக் காட்டப்பட்டது." உங்களைக் கிறிஸ்துவின் கிருபையினாலே அழைத்தவரை நீங்கள் இவ்வளவு சீக்கிரமாய் விட்டு, வேறொரு சுவிசேஷத்திற்குத் திரும்புகிறதைப் பற்றி நான் ஆச்சரியப்படுகிறேன். வேறொரு சுவிசேஷம் இல்லையே; சிலர் உங்களைக் கலகப்படுத்தி, கிறிஸ்துவினுடைய சுவிசேஷத்தைப் புரட்ட மனதாயிருக்கிறார்களே யல்லாமல் வேறல்ல. நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது,

வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக் கடவன்." (கலாத்தியர் 1 : 6 - 8). உலகின் சகல மக்களுடைய இரட்சிப்பின் ஒரே திட்டத்திற்கு விரோதமாக உபதேசிப்பவர்கள் யாராக இருப்பினும் அவர்கள் நிராகரிக்கப்பட்டு, கள்ளப் போதகர்கள் என அறியப்பட்டனர். "கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடம் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக் கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்குப் பங்குள்ளவனாகிறான்." (2 யோவான் 9-11). எனவே, எந்த மதமும் இன்று கிறிஸ்துவின் கொள்கைகளுக்கு ஒத்துப் போகாமல் அல்லது அனுமதிக்கப்படாமலிருந்தால் அவை நிராகரிக்கப்பட வேண்டும். "நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும் மரித்தவர்களையும் நியாயந் தீர்க்கப் போகிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் அவருடைய ராஜ்யத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது: சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு, சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும்." (2 தீமோத்தேயு 4 : 1 - 4). கிறிஸ்துவின் தூய நற்செய்திக்கு விரோதமாக எதையும் தாங்கிக் கொள்ளுவதோ அல்லது ஏற்றுக் கொள்ளுவதோ அப்போது (இன்றும் கூட) மிகவும் ஆபத்தான ஒரு காரியம் என கர்த்தரின் சபையின் ஆதிநாட்களில் வாழ்ந்தவர்கள் அறிந்தனர். "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி : கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி : கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே

தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்". (மத். 7 : 21 - 23). நம் நாட்டிலோ அல்லது உலகம் முழுவதிலுமோ இன்று நிலவுகிறதைப் போல 350க்கும் மேலான திட்டங்கள் இல்லாமல், ஒரே ஒரு இரட்சிப்பின் திட்டம் மட்டுமே இருக்கிறது என்று மேலே கண்ட சகல வேதவாக்கியங்களிலிருந்தும், இன்னும் பல வசனங்களிலிருந்தும், நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. "எல்லாரும் ஒன்றாயிருக்க" இயேசு ஜெபித்தார். (யோவான் 17 : 20 - 21).

"சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏகமனதும் ஏகயோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன் . . . . உங்களில் சிலர் : நான் பவுலைச் சேர்ந்தவனென்றும், நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும், நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும், நான் கிறிஸ்துவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால் நான் இப்படிச் சொல்லுகிறேன்." (1 கொரிந்தியர் 1 : 10 - 13). இன்று காணப்படும் பிரிவுகள் அனைத்தும் கிறிஸ்துவின் கொள்கைப்படியானவை அல்ல என்பது மிக தெளிவாகத் தெரிகிறது. "மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும், நீதிக் கேதுவான கீழ்ப்படிதலுக்கானாலும், எதற்குக் கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ, அதற்கே கீழ்ப்படிகிற அடிமைகளாயிருக்கிறீர்களென்று அறியீர்களா? முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேசச்சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்," (ரோமர் 6 : 16 - 18). அவர்கள் கீழ்ப்படிந்த கொள்கையின் திட்டம் கீழ்க்கண்ட வசனத்தில் மிகத் தெளிவாக்கப்பட்டுள்ளது : "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும்

புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்." (ரோமர் 6 : 3-5). தேவனுடைய வாக்கியங்களின் முதல் கொள்கைக்குக் கீழ்ப்படிதல், கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்ப்பு ஆகியவற்றை புதுப்பித்தலாகும். மேலே கண்டவைகளுக்கு விரோதமாக பல கொள்கைகள் உபதேசிக்கப்படுகின்றன. ஆனால் மேலே கண்டது கிறிஸ்துவின் கொள்கை. எனவே, "உன்னைக் குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்வாய்." (1 தீமோ. 4 : 16).

**எஸ். எஸ். ராஜன்.**

---


# *World Video Bible College*

(Educating for Eternity)

And the things that you have heard from me among many witnesses, commmit these to faithful men who will be able to teach others also.

## ANNUAL DAY

*Dear Sir/Brother,*

*We solicit your earnest prayers and esteemed presence on the occasion of the Second Anniversary Celebration of the 'World Video Bible College', Kangayam.*

*Venue :* *Church of Christ Premises, Dharapuram Road, Kangayam*

*Date :* *9-2-96 Friday*

*Time:* *9.00 a.m*

*With Best Compliments from*
**Members, Church of Christ**
KANGAYAM

By
**E.Z.S. RAJANAYAGAM,**
Director, World Video Bible College
Dharapuram Road, KANGAYAM-638701

# HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRI LANKA

| | | |
|---|---|---|
| **HINDI** | : | Sunday 8:45 P.M. - 9.00 P.M. Tuesdays, Thursdays, and Fridays, 9.00 P.M. - 9.15 P.M. Speaker, Sunny David, Box 3815, New Delhi - 110049. |
| **ENGLISH** | : | Mondays, 9.00 P.M. - 9.15 P.M. Fridays, 7.45 P.M. - 8.00 P.M. Speaker, J.C. Choate, Box 3815, New Delhi - 110049. |
| **TELUGU** | : | Sundays, Tuesdays, Thursdays, Fridays, and Saturdays, 2.15 P.M. 2.30 P.M. Speaker, Joshua Gootam, Box 80, Kakinada - 533 001. |
| **TAMIL** | : | Sundays, Thursdays, 6.45 P.M. - 7.00 P.M. Tuesdays, 5.30 P.M. 5.45 P.M. Speaker, P.R. Swamy, Box 8405, Banagalore - 560 084. |
| **MALAYALAM** | : | Tuesdays and Fridays, 3.45 P.M. - 4.00 P.M. Speaker, P.K. Varghese, Sunny Meads Lane, Behind Sanskrit College, Trivandrum - 695 034. |
| **KANNADA** | : | Sundays, 1.45 P.M. 2.00 P.M. - 2.00 P.M. Speaker, Robert Rathnakar, Box 448, Banagalore - 6600 004. |

Please write to these addresses for Bible correspondence course, magazines, and other Christian literature in your language.

ALL OF THESE PROGRAMMES ARE SPONSORED BY THE CHURCH OF CHRIST.

Licenced to Post without Prepayment of Postage TN/ERD/W/0 PP/5
Posted ar Erode HPO on 20, JAN
JAN THIRUMARAI AASAAN Regd. No. TN/ERD/49

## -: அஞ்சல் வழி வேதாகமக் கல்வி :-

பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு ஓர் இனிய செய்தி. ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட, "அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியை" ஆரம்பிக்க கர்த்தர் கிருபை புரிந்துள்ளார்.

இது, 15 பாடங்களைக் கொண்ட இலவசப் பயிற்சி. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு, "சான்றிதழ்" வழங்கப்படும்.

பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

இயக்குநர்
அஞ்சல் வழி வேதாகமக் கல்வி
த.பெ.எண். 27
காங்கயம் - 638 701.

Published by Church of Christ, Kangayam and
Printed at Jeeva Sakthi Press, Erode. Editor E.Z.S. Rajanayagam

PRINTED MATTER

BOOK - POST

If undelivered Please return to
The Editor phone (04257) 20030
THIRUMARAI AASAAN
POST BOX No 27 KANGAYAM - 638 701